DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C. No. 227 /2025 |
| Prosecution Witness | : | P.W. 1 |
| List of witness | : | L.W.2 |
| Name | : | மகேஷ்குமார் |
| Father's /Husband Name | : | ராஜேந்திரன் |
| Village | : | பேரளம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 34 |
| Occupation | : | முதல்நிலைக்காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 08th January, 2026
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் பேரளம் காவல் நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.04.2025-ம் தேதி பேரளம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் விக்னேஷ்குமார் என்பவருடன் நானும், 424 முதல்நிலைக்காவலர் சுரேஷ் என்பவரும் மதுவிலக்கு அலுவலாக 17.00 மணிக்கு பேரளம் காவல் சரகத்திற்குட்பட்ட ஏ. கிளியனூர் கடைத்தெரு அருகே கண்காணித்து வந்தபோது சந்தேகம்படும்படியாக நின்றுகொண்டிருந்த ராமலிங்கம், த/பெ. ராஜா, திருவாரூர் சாலை கழனிவாசல் மங்கைநல்லூர் என்பவரை நின்றுகொண்டிருந்த இடத்தை சோதனை செய்த போது சுமார் 15 லிட்டர் பிடிக்கக்கூடிய இரண்டு பாலிதீன் பைகளில் தலா 10 லிட்டர் வீதம் மொத்தம் 20 லிட்டர் பாண்டி சாராயம் வைத்திருந்தார். அந்த பாலிதீன் பைகளை பிரித்து அதிலிருந்த சாராயத்தை முகர்ந்து பார்த்த போது ஒருவித விஷ நெடியுடன் கூடிய வாடை வீசியது மற்றும் கண் எறிச்சலும் குமட்டலும் ஏற்பட்டது. மேற்படி விஷ நெடியுடன் கூடிய சாராயத்தை மனிதர்கள் அருந்தினால் மனித உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று தெரிந்து மேலும் மேற்படி பாண்டி சாரயத்தை வைத்திருப்பதற்கு அவரிடம் எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாததால் அவரை காரணம் கூறி கைது செய்து மேற்படி தடயங்களுடன் காவல் நிலையம் கொண்டு வந்து தனி அறிக்கையுடன் உதவி ஆய்வாளர் ஆஜர் செய்து ஆய்வாளரிடம் நடவடிக்கை எடுக்குமாறு கோரியதன் பேரில் ஆய்வாளர் சுகுணா எதிரி ராமலிங்கம் என்பவர் மீது குற்ற எண்.171/2025 சட்டப்பிரிவுகள் 4(1) (C) r/w 4(1-A) (ii) TNP Act 2024 (Tamilnadu Prohibition Amendment Act 2024) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். பின்பு, கைப்பற்றப்பட்ட தடயங்களை 18.04.2024-ம் தேதி 19.45 மணிக்கு பேரளம் காவல் நிலையம் வந்து கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார். மேற்படி கைப்பற்றுதல் நானும், சுரேஷ் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம்.

தற்போது நீதிமன்றத்தில் என்னிடத்தில் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் காவல் ஆய்வாளர் எதிரி ராமலிங்கம் என்பவரை மாண்புமிகு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நன்னிலம் அவர்கள் முன்னிலையில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் பின்பு, 22.05.2025–ம் தேதி 11.30 மணிக்கு எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட தடயங்களை பேரளம் காவல் நிலையம் முன்பு கொட்டி அழித்தார். அப்போது தயார் செய்யப்பட்ட அழித்தல் மகஜரில் நானும், சுரேஷ் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். மேற்படி வழக்கில் புலன் விசாரணைக்கு அவருக்கு நான் உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் காவல் ஆய்வாளருடன் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து எவ்வித சாராயத்தையும், இருசக்கர வாகனத்தையும் கைப்பற்றவில்லை என்றாலும், எதிரியை சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசர் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதில் காவல் ஆய்வாளர் எனது உயரதிகாரி என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்காக சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கானது புள்ளி விவரத்திற்காக போடப்பட்டது என்றாலும், அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2026.01.21 12:18:19 +0530